# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சிமையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (16.04.2025 முதல் 20.04.2025)

**அறிக்கை எண் 030/2025** **தேதி.15.04.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 19°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பரவலாக மழை பெறப்படவில்லை.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 11.04.25 முதல் 14.04.25 வரையிலும் பகல்நேரவெப்பநிலை் 34°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 74-81 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 44-57 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-23 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண்அறிக்கை**

| கடந்த வார வானிலை (11.04.2025 முதல் 14.04.2025) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 20.04.2025- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 11/04 | நாள்-2 12/04 | நாள்-3 13/04 | நாள்-4 14/04 | தேதி | நாள்-1 16/04 | நாள்-2 17/04 | நாள்-3 18/04 | நாள்-4 19/04 | நாள்-5 20/04 |
| 0.0 | 4.7 | 0.6 | 0.0 | மழை (மி.மீ) | 8 | 10 | 12 | 15 | 22 |
| 34 | 34 | 34 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 34 | 34 |
| 24 | 24 | 23 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 24 | 24 |
| 5 | 5 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| 78 | 79 | 81 | 74 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 80 | 80 |
| 56 | 57 | 44 | 49 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 55 | 55 |
| 13 | 23 | 13 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 2 | 2 | 2 | 4 | 2 |
| 230 | 200 | 140 | 230 | திசை | 180 | 200 | 270 | 250 | 220 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (16.04.2025 முதல் 20.04.2025)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75-80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 45-55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 02-04 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

***வானிலை முன்னெச்சரிக்கை***

*இந்த வாரம் இடி, மின்னல், காற்றுடன் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண்மையில் வானிலை முன்னெச்சரிக்கை அறிவுரை***

*மழை எதிர்பார்க்கப்படுவதால், அனைத்து இறவைப் பயிர்களுக்கும் மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.*

***வேளாண் அறிவுரைகள்***

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | *மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான அல்லது மிதமான மழையுடன் மணிக்கு 4 கிமீ வரை காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.*<br>*எதிர்பார்க்கப்படும் மழையின் காரணமாக பகல்நேர வெப்பநிலையானது 36°செ கீழ் குறைய வாய்ப்புள்ளது.*<br>*மழை எதிர்பார்க்கப்படுவதால், அனைத்து இறவைப் பயிர்களுக்கும் மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனத்தினை ஒத்திவைக்கவும்.*<br>*எதிர்பார்க்கப்படும் மழையினை உபயோகப்படுத்தி உடனடியாக சரிவுக்கு குறுக்காக மண்புரட்டிவிடும் கலப்பை மூலம் கோடைஉழவு செய்து மழைநீரினை சேமிப்பதுடன் மண் அரிப்பினையும் தடுக்கலாம்.*<br>*மேலும் பயிர்களில் பயிர்கழிவு மூடாக்கு இடுவதனால் மழையினால் கிடைத்த மண் ஈரத்தினை ஆவியாகமல் சேமிக்கலாம்.* |
| கம்பு | ***விதைப்பு*** | *மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு விதைப்பை மேற்கொள்ளலாம். மேலும் விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினப்படுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.*<br>*கடந்த வாரம் விதைக்கப்பட்ட கம்பில் பாடுவாசி நடவு செய்து தேவைப்பட்டால் நீர் பாய்ச்சவும்.* |
| மரவள்ளி கிழங்கு | ***வளர் பருவம்*** | *சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளி கிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 5 – 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.* |

| | | |
|---|---|---|
| வாழை | **வளர் பருவம்** | பரவலரக வாழையில் குருத்து அழுகல் நோய் காணப்படுகிறது. இதற்கு 1 லிட்டர் தண்ணீரில் 20 கிராம் பீளீச்சிங் பவுடரை கலந்து மரத்தின் அருகே ஊற்றவேண்டும். இதை நோய் வருவதற்கு முன்பு செய்தால் நோய் வராமல் பாதுகாக்கலாம். |
| தென்னை | | அனைத்து மரப்பயிர்களுக்கும் தூரிலிருந்து 1.5 தூரத்தில் உள்நோக்கிய வட்டப்பாத்தி அமைத்து கோடை மழையினை வேர்பகுதியல் சேமிக்கவும். |
| கால்நடைகள் | | ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேய விடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

- அறுவடைசெய்த நிலங்களில் கோடைஉழவும் மற்றும் பயிர்களில் பயிர்கழிவு மூடாக்குமிட்டு மழையினால் கிடைத்த மண் ஈரத்தினை ஆவியாகமல் சேமிக்கலாம்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**